அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2013

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி 2013

# விசேட இளைஞர் பிரிவு

(15 – 17 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(அ) பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடைகளைத் தெரிந்தெடுத்து அதற்குரிய இலக்கத்தை விடப்பட்ட இடத்தில் எழுதவும்.**(10 புள்ளிகள்)

1) “பொன்னியின் செல்வன்” நூலை எழுதியவர் யார்?
(i) சாண்டில்யன் (ii) கல்கி
(iii) அகிலன் (iv) மு. மேத்தா [ ]

2) கற்பிற்கு இலக்கணம் சீதை போல நட்பிற்கு இலக்கணம் யார்?
(i) கும்பகர்ணன் (ii) கர்ணன்
(iii) திரௌபதி (iv) பீஷ்மர் [ ]

3) ஒரே சமயத்தில் எட்டு விடயங்களை அறியும் ஆற்றல் உள்ளவன்.
(i) அட்டாவதானி (ii) தசாவதானி
(iii) சதாவதானி (iv) திறமைசாலி [ ]

4) பின்வருவோரில் தமிழ்க் கவிஞர் அல்லாதவர் யார்?
(i) இ. முருகையன் (ii) காசி ஆனந்தன்
(iii) மாத்தளை சோமு (iv) வாலி [ ]

5) அந்தம் என்ற செல்லின் எதிர்ச் சொல் எது?
(i) முடிவு (ii) தொடக்கம்
(iii) கடைசி (iv) அநந்தம் [ ]

6) பின்வருவனவற்றில் எது சினை ஆகு பெயர் ஆகும்?
(i) அவுஸ்திரேலியாவின் கோபம் (ii) நீலம் வாங்கினான்
(iii) பொங்கல் உண்டான் (iv) வெற்றிலை நட்டான் [ ]

7) கரும்பு + வில்
(i) கரும்பு வில் (ii) கருப்பு வில்
(iii) கறுப்பு வில் (iv) கரும்வில் [ ]

8) கரும்பு ருசி என்று.........................
   (i) சாப்பிடலாமா?  (ii) விலை பேசலாமா?
   (iii) வேரோடு பிடுங்கலாமா?  (iv) வெட்டி வீசலாமா?  [   ]

9) இறந்த வீரரின் பெயரையும் புகழையும் பொறித்து நடும் கல்
   (i) நடுகல்  (ii) இடுகாட்டுக்கல்
   (iii) சுடுகாட்டுக்கல்  (iv) வீரக்கல்  [   ]

(10) அவுஸ்திரேலியாவில் வாழும் ஒரு சிறந்த நாடகக் கலைஞர் அல்லாதவர்
   (i) மாவை நித்தியானந்தன்
   (ii) இளைய பத்மநாதன்
   (iii) குழந்தை. ம. சண்முகலிங்கம்
   (iv) கோகிலா மகேந்திரன்  [   ]

| புள்ளிகள் | |
|---|---|

**(ஆ) பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடைகளைக் கோடிட்ட இடத்தில் எழுதவும்.** (20 புள்ளிகள்)

1) Insurance என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஒத்த தமிழ்ச் சொல் தருக?

________________________________.

2) ‘கத்திரிக் கோல்’ என்ற சொல்லைத் திருத்தி எழுதுக?

________________________________.

3) ‘ஐம்பெரும் பாதகங்கள்’ எவை?

________________________________________________________.

4) ‘கைகலத்தல்’ என்ற மரபுத் தொடரின் கருத்து என்ன?

_______________________________________________.

5) ‘நாவலர்’ என்று பட்டம் பெற்ற இலங்கையர் யார்?

_______________________________________________.

6) ஒரு நிகழ்ச்சியைப் பலரும் பார்ப்பதற்கு முன்னர் பரிசோதித்துப் பார்ப்பதை எப்படிக் கூறுவர்?

_______________________________________________.

7) கீழே தரப்பட்ட சொல்லைப் பிரித்து எழுதுக?

வாட்படை _________________________________.

8) “இந்த வருடம் மளை பெய்யாததால் விழைச்சல் குறைவாக இருந்தது” என்ற வாக்கியத்தில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக?

_______________________________________________

_______________________________________________.

9) ‘அக்கினி’ என்ற சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல் ஒன்று எழுதுக?

_______________________________________________.

(10) அவுஸ்திரேலியாவில் ஏறத்தாழ எத்தனை தமிழர்கள் வாழ்கின்றார்கள்?

_______________________________________________.

| புள்ளிகள் | |
|---|---|

**(இ) பின்வரும் சொற்களை அவற்றிற்குப் பொருள் விளங்கும்படி வாக்கியங்களில் அமைக்குக.** (10 புள்ளிகள்)

(1) மரை ______________________________

______________________________

மறை ______________________________

______________________________

(2) கிழி ______________________________

______________________________

கிளி ______________________________

______________________________

(3) பணி ______________________________

______________________________

பனி ______________________________

______________________________

(4) சூலை ______________________________

______________________________

சூளை ______________________________

______________________________

(5) அன்னம் ______________________________

______________________________

அண்ணம் ______________________________

______________________________

| புள்ளிகள் | |
|---|---|

**(ஈ) கீழே தரப்பட்ட சொற்களை ஒழுங்கு படுத்திச் சரியான வசனங்களை அமைக்குக.** (10 புள்ளிகள்)

(1) செவ்விகாணலில் / இன்று / வகிக்கின்றன / இடத்தைப் / முக்கிய / பொதுசன / தொடர்பு சாதனங்கள்.

________________________________________

________________________________________

(2) பழகப் / என்பது / பழகப் / புளிக்கும் / ஒரு / பாலும் / ஆகும் / பழமொழி.

________________________________________

________________________________________

(3) வரும் / அவுஸ்திரேலியாவுக்குள் / பிரச்சினை / இன்று / எடுத்துள்ளது / விஸ்வரூபம் / புகலிடக் / கோரிக்கையாளர்களின்.

________________________________________

________________________________________

(4) மேலான / நியாயம் / பிரபஞ்சத்தின் / அன்பு / ஆகியவையே / ஒற்றுமை / ஆகும் / சக்திகள்.

________________________________________

________________________________________

(5) இந்தியாவிற்குச் / பெற்றுத் / மகாத்மா / சுதந்திரம் / தந்த / ஆவார் / புருஷர் / காந்தி / மகா.

________________________________________

________________________________________

| புள்ளிகள் | |
|---|---|

# பகுதி II

**(உ) கீழே தரப்பட்ட பந்தியை வாசித்தபின் கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான பதில்களை எழுதவும்.** (25 புள்ளிகள்)

வாழ்வின் கற்பனைகள் அனைத்தையும் வரவழைக்கும் பருவம் என்றும், தெளிவற்ற மனப்பனிகளுக்கு ஊடாகப் பயணம் செய்து பகற்கனவு காணும் பருவம் என்றும், புதிய விருப்பங்கள், புதிய அநுபவங்கள், புதிய சந்தர்ப்பங்களை நோக்கி விழித்தெழும் பருவம் எனறும் பேசப்படுகின்ற கட்டிளமைப் பருவம் பிற்கால வாழ்வில் நின்று திரும்பிப் பார்க்கும் போது மிக அழகான பருவமாகத் தோற்றமளிப்பது!

உடற்றொழிலியல் ரீதியாகப் பார்க்கும்போது ஓர் உயிரி என்ற வகையில் முதன் முதலாக இனம் பெருகும் முதிர்ச்சியை அடையும் பருவம் என்று பதின்ம வயதுப் பருவத்திற்கு வரைவிலக்கணம் கூறலாம். உளவியல் ரீதியாகவும் சில முக்கியமான வளர்ச்சி நிலைகளைத் தொடும் பருவம் இது. மற்றவர்களில் தங்கி வாழும் பிள்ளைப் பருவத்தில் இருந்து தன்னாதிக்கமும் தன்னிறைவும் கொண்ட நிறையுடலியாக மாறும் பருவம் என்று இதனைச் சமூகவியளாளர்கள் கூறுவர்.

பதின்ம வயதுப் பருவத்தினரை முகாமை செய்வது என்பது வரவரக் கடினமாகி வருகின்றது என்பது பொதுவான ஒரு குற்றச்சாட்டு ஆகும். ஆனால் வரலாற்றை நாம் ஒருமுறை திரும்பி நின்று பார்ப்போமானால் இளைஞர்கள் பிரச்சினைக் குரியவர்கள் என்ற அபிப்பிராயம் அனேகமாக எல்லாக் காலங்களிலுமே அவ்வப்போது வாழ்ந்த எழுத்தாளர்களால் முன்வைக்கப் பட்டிருப்பதைப் பார்க்க முடியும். கட்டிளமைப் பருவத்தினர் எந்தக் காலத்திலுமே ஏனைய வயதுப் பிரிவினரில் இருந்து வித்தியாசமானவர்களாகவே இருந்திருக்கிறார்கள் என்பது இதிலிருந்து சுட்டப்படுகிறது.

ஸ்ரான்லி ஹால் என்பவர் முன்வைத்த ''கூர்ப்புச் சார் இலட்சியவாதம்'' என்ற கொள்கையில் கட்டிளமைப் பருவமே கூர்ப்பை முன்னெடுத்துச் செல்ல மிகச் சரியான பருவம் என்று குறிப்பிடுவார். அவருடைய இந்தக் கருத்தை அவருக்குப் பின்னால் வந்தவர்கள் ஏற்கவில்லை. ஆயினும் பதின்ம வயதினருக்கு அவர் தந்த முக்கியத்துவம் தொடர்ந்து காவிச் செல்லப்படுகின்றது. கட்டிளமைப் பருவம் என்பது ஒரு இரண்டாவது பிறவி என்பது ஹாலின் கருத்து.

இந்தப் பருவத்தினர் எதற்கும் துணிந்தவர்களாயும் நம்பிக்கை உள்ளவர்களாயும் இருக்கும் அதே சமயத்தில், குழப்படைந்தவர்களாயும், பயந்தவர்களாயும் இலகுவில் பாதிக்கப் படக்கூடியவர்களாயும் பதற்றப் படுபவர்களாயும் இருப்பர். உடலிலும் உள்ளத்திலும் ஏற்படும் முக்கிய மாற்றங்கள் காரணமாக இவர்கள் அநேகமான நேரங்களில் சமநிலை இழந்து இருப்பார்கள் என்று கருதப்படுகின்றது. இதனாலேயே இப் பருவம் அழுத்தமும் புயலும் நிறைந்த பருவம் என்று பொதுவாகப் பேசப்படும்.

இப்பருவத்தினா் தமது உணா்வுகளை விபரிப்பதைப் பெரியவா்கள் தூண்டவேண்டும். இதே நேரத்தில் உணா்வுக் கட்டுப்பாடு பற்றிய பயிற்சிகளும் தொடக்கப்படல் வேண்டும். கிளா்ந்து எழும் மறை உணா்வுகளைக் கையாளுவது கடினமானதே. ஆனாலும் அவற்றைத் தம்கையில் எடுத்துக் கொள்ள அவா்களுக்குப் பயிற்சி தரவேண்டும். நோ் உணா்வுகள் கூடிய அளவு முக்கியம் பெறும் ஒரு வாழ்வுச் சமநிலையை ஏற்படுத்திக் கொள்ளக் கட்டிளமைப் பருவத்தினா் பயிற்றப்பட்டால் வெற்றி நமதே!

1. ''கட்டிளமைப் பருவம்'' என்பதற்கு நீா் தரும் வரைவிலக்கணம் யாது?
2. 'பதின்ம வயதினா் பிரச்சினைக் குரியவா்கள்' என்ற கருத்தை நீா் ஏற்றுக் கொள்கிறீரா? உமது விடைக்கு இரண்டு ஆதாரங்கள் தருக?
3. 'கட்டிளமைப் பருவம் அழுத்தமும் புயலும் நிறைந்த பருவம்' என்று கூறப்படுவது ஏன்?
4. கட்டிளமைப் பருவத்தினா் எதிா் கொள்ளும் சவால்களைத் தீா்ப்பதற்கு இரண்டு வழிமுறைகளைக் கூறுக?
5. 'கட்டிளமைப் பருவம் என்பது ஒரு இரண்டாவது பிறவி' என்ற கூற்றினால் நீா் விளங்கிக் கொள்வது யாது?

| புள்ளிகள் | |
|---|---|

**(ஊ) கீழே தரப்பட்ட தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாத கட்டுரை ஒன்று வரைக.** (25 புள்ளிகள்)

1. புலம் பெயா்ந்து அவுஸ்திரேலியாவில் வாழும் இளைஞா், யுவதிகளுக்கு அவா்களின் பெற்றோா் ஊடாகக் கடத்தப்படும் கலாசார விழுமியங்கள் இருக்கின்றன. ஆங்கில ஊடகங்கள் அவா்கள் மீது செலுத்தும் செல்வாக்கு அந்த விழுமியங்களைத் தகா்ப்பதாக இருக்கலாம். அல்லது வளா்ப்பதாக இருக்கலாம். இவ்விடயத்தை மதிப்பீடு செய்யும் வகையில் உமது கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

2. ''ஒரு மாலை நேரத்தில் நான் அந்தப் பூந்தோட்டத்தில் அமா்ந்திருந்தேன். தென்றல் காற்று வீசிய போது மரங்கள் சல சலத்தன. மரங்களும், இலைகளும், பூக்களும், பறவைகளும் என்னோடு பேசுவது போல் நான் உணா்ந்தேன்'' என்று தொடங்கி ஒரு கற்பனைக் கட்டுரை வரைக.

3. குறிப்பட்ட ஒரு நூலை வாசித்த பிறகு உம்மிடத்தில் ஏற்பட்ட மாற்றங்களைத் தெறிக்கும் வகையில் ஒரு கட்டுரை எழுதுக.

| புள்ளிகள் | |
|---|---|